# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இலங்கை பிரதமர் & இந்திய உயர் ஸ்தானிகரால் கூட்டாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட ஸ்ரீ சோபித நாஹிமிகம திட்டம்</u>**

அநுராதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீ சோபித நாஹிமிகம திட்டத்தின் கீழ் இந்திய ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், 2025 ஜூலை 12 ஆம் திகதி மாண்புமிகு இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா ஆகியோரால் கூட்டாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

2. நகர அபிவிருத்தி, நிர்மாணம், மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ டாக்டர் அநுர கருணாதிலக, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ வசந்த சமரசிங்க, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் கௌரவ டி பி சரத், பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் திரு கரு ஜயசூரியா, பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சேனா நாணயக்கார, அநுராதபுரம் மாவட்ட செயலாளர், ஷோபித தேரர் நிதிய தலைவர் திரு ரவி ஜயவர்த்தன மற்றும் ஏனைய பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

3. இங்கு உரை நிகழ்த்திய இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், இரு நாட்டினதும் மக்களின் நலனுக்கான இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும், இந்த விடயத்திற்கான அணுகுமுறைகளில் காணப்படும் ஒருங்கிணைப்பையும் குறிப்பிட்டார். 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்ற குறிக்கோளுடன் இந்தியா 'விக்சித் பாரத் என்ற இலக்கை நோக்கி முன்னேறி வருவதையும், இலங்கையும் 'வளரும் தேசம் மற்றும் அழகான வாழ்வு' என்ற இலக்கை நோக்கிய பாதையில் பயணப்படுவதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார். அண்மையில் தொடங்கப்பட்ட மாஹோ-அனுராதபுரம் ரயில் பாதைக்கு இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட சமிக்ஞை அமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட மாஹோ-ஓமந்தை ரயில் பாதை, புனித நகர (அநுராதபுரம்) வளாக திட்டம் போன்று அனுராதபுரத்தில் முன்னெடுக்கப்படும் இந்தியாவின் பல்வேறு அபிவிருத்தி ஒத்துழைப்பு முயற்சிகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டிய உயர் ஸ்தானிகர், பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு உறவின் அனைத்து பரிமாணங்களிலும் இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டையும் மீண்டும் வலியுறுத்தினார்.

4. மாண்புமிகு இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய அவர்கள் தனது உரையில், சமூக நீதிக்காக வலுவான குரல் எழுப்பிய மறைந்த சங்கைக்குரிய மாதுளுவாவே சோபித தேரர் அவர்களின் போதனைகளை

நினைவூட்டியிருந்தார். வரலாற்று ரீதியாக பின்தங்கிய கிராம மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் வகையில் ஸ்ரீ சோபித நஹிமிகம திட்டத்தினை முன்னெடுத்தமைக்காக இந்திய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். இதேவேளை நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ டாக்டர் கருணாதிலக, வியாபாரம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சமரசிங்க ஆகியோர் தமது உரைகளின்போதும், இந்த திட்டத்திற்கு நிதி உதவி செய்தமைக்காக இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தனர்.

5. அநுராதபுரத்தின் எலபத்கம கிராமத்தில் வசிப்பவர்களுக்கு 115 வீடுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். வட மத்திய மாகாணத்தின் வறண்ட மண்டலத்தில் அமைந்துள்ள வறுமையால் பாதிக்கப்பட்ட கிராமத்தின் வளர்ச்சிக்காக மறைந்த வணக்கத்திற்குரிய தேரர் அவர்கள் கொண்டிருந்த தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, வணக்கத்திற்குரிய மாதுளுவாவே சோபித தேரர் நினைவு அறக்கட்டளையின் வேண்டுகோளின் அடிப்படையில் இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நவீன வசதிகளைக் கொண்ட இக்கிராமத்திற்கு ஸ்ரீ ஷோபித நஹிமிகம என புதிய பெயர் சூட்டப்படவுள்ளது.

6. இந்திய அரசுக்கும் இலங்கையின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சுக்கும் இடையே ஜூலை 2017 இல் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கையெழுத்திடப்பட்டது. அதன் பின்னர் இத்திட்டம் மீளமைக்கப்பட்ட நிலையில், இந்திய அரசு 90 வீடுகளுக்காக 450 மில்லியன் இலங்கை ரூபாவுக்கும் அதிகமான நிதி உதவியை அறிவித்தது, அதே நேரத்தில் இலங்கை அரசு 25 வீடுகளையும் துறவிகளுக்கான வீடுகள் மற்றும் நூலகம் போன்ற பிற வசதிகளையும் நிர்மாணித்தது. இவை 2024 ஏப்ரலில் முன்னதாக நடைபெற்ற ஒரு விழாவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு கையளிக்கப்பட்டன. இந்நிலையில் ஜூலை 12 ஆம் திகதி 90 வீடுகள் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இத்திட்டம் இப்போது முழுமையாக நிறைவடைந்துள்ளது.

************

**கொழும்பு**
**12 ஜூலை 2025**